# ஈழத்து நாட்டார் பாடல்களில் தாலாட்டுப் பாடல்கள்

**நந்தகுமார் சஞ்ஜீவன்**

**சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் II**

**இசைத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை**

tnsanjai@yahoo.com

**13**

**ஆய்வுச்சுருக்கம்**

தாலாட்டு என்பது தால்+ஆட்டு எனப் பகுபட்டு பொருள் விளங்கப்படுகின்றது. இங்கு “தால்” என்பது நாக்கினையும், “ஆட்டு” என்பது நாவினை ஆட்டி ஓசையெழுப்பும் தன்மையினைச் சுட்டி நிற்கின்றது. அதாவது நாவினால் ஓசையெழுப்பி பாடப்படும் பாடல் தாலாட்டு எனப்படுகின்றது. இத்தாலாட்டுப்பாடலானது நாடோடிப்பாடல்களில் தொன்றுதொட்டு தமிழ் மக்கள் மரபில் இன்றியமையாததாகவுள்ளது. இத்தாலாட்டு தமிழர்களின் தாயகமான தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் ஒத்த அமைப்பில் பாடப்படுவது. அவற்றில் ஈழத்தில் பயன்படுத்திவரும் தாலாட்டுப்பாடல்களைப் பற்றிய கட்டுரையாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

இக்கட்டுரையில் தாலாட்டுப்பாடல்களின் தொன்மை, இசையமைப்பு, பாடலமைப்பு, தாலாட்டுப் பாடல்களின் பயன்பாடு, அவற்றின் வகைப்பாடுகள் உதாரணங்களுடன், ஆகிய விடயங்களினூடாக ஆராயப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள் :- பண்பாட்டு அடையாளங்கள், தாலாட்டு, சமூக அடையாளம், நாட்டாரிசை, பக்தி, இசையமைப்பு, ஈரடிக்கண்ணி

**ஆய்வின் நோக்கம்**

தற்போது ஈழத்தமிழர்களிடையே நாட்டார் பாடல்களும் அவற்றில் முக்கியமான ஒன்றான தாலாட்டுப் பாடல்கள் வழக்கொளிந்து போகின்றன. அதற்கு ஈழநாட்டில் இடம்பெற்ற யுத்தம் அதனாலான இடப் பெயர்வுகள் குறிப்பாக நாடுவிட்டு நாடு சென்ற துர்ப்பாக்கிய நிலைமை என்பன இவ்அழிவிற்கு பெரும் காரணமாகின்றன. இவைதவிர தற்கால மக்களிடையே பழைமை பேணாமை, நவநாகரிக மோகம், மேலைத்தேய கலாச்சார விருப்பு எனும் இன்னோரன்ன காரணங்களும் இவ்விடயத்தில் பங்கெடுக்கின்றன. இதனால் தற்கால வழக்கில் இப்பாடல்கள் மிக அருகியும், அழியும் நிலையிலும் உள்ளன. அந்நிலையிலிருந்து மீள உருவாக்கம் செய்வதற்கும் இப்பாடல்களின் தனித்துவத்தினையும் சிறப்பினையும் பேணுவதற்காகவும் அவற்றை வெளிக்கொணர்வதற்கும் இவ்வாய்வு மேற் கொள்ளப்படுகின்றது.

**முன்னுரை**

தமிழ் நாட்டின் பூர்வீக வரலாற்றுடன் ஈழம் பின்னிப்பிணைந்தது. இதிகாச புராணத் தொடர்புகள் இதன் பழைமையை நன்கு சுட்டிக்காட்டுகின்றது. இத்தொடர்பு சங்ககாலம் முதல் தற்காலம் வரை தொடர்வது பெருமைக்குரிய விடயமாகும். முக்கியமாக தமிழ் நாட்டினர்க்கும் ஈழத்தமிழர்களுக்கும் கலை, கலாசாரம், கல்வி, உணவு போன்ற அடிப்படைத்தகைமைகள் ஓர் இனம்

எனும் தன்மையை பரிமளிக்கச் செய்கின்றது.

ஈழம் எனும் சொல் சங்ககால புலவர்களில் ஒருவரான "ஈழத்துப்பூந்தேவனார்" அவர்களின் பெயரினின்று அதன் தொன்மையைப் பறைசாற்றுகின்றது.

அவ்வகையில் தமிழ் இலக்கிய மரபு இரு நாட்டுத்தமிழர்களிற்கும் பொதுவானதாகவும் ஒத்த இயல்பினதாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அவ்வகை இலக்கியங்களில் பாமரர்களின் இலக்கியமான நாட்டாரிலக்கிய மரபில் முக்கியமானதாக இடம்பெறும் தாலாட்டுப்பாடல் பற்றி நோக்குகையில் தாலாட்டு என்பது சிறு குழந்தையை தூங்கச் செய்வதற்கு இசையுடன் கூடிய பாடலாய்ப்பாடி தாயினால் பாடப்படும் பாடலாய் அமைத்ததுவே தாலாட்டுப் பாடலாகும். அதாவது குழந்தையை தொட்டிலிலோ அன்றி தூளியிலோ (ஏணை) இட்டு அதனை ஆட்டிப் பாடப்படும் இசைப்பாடலாகும். ஆனால் இப்பாடல்கள் தாயினால் மட்டுமன்றி பாட்டி முதலிய ஏனைய உறவுகளும் குழந்தையைத் தூங்கச் செய்வதற்கு பாடும் சிறந்த சந்தர்ப்பங்களுமுண்டு. இவ்வகைத் தாலாட்டுப் பாடல்கள் தமிழர் மரபில் தொன்று தொட்டு பாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**தாலாட்டின் தொன்மை**

தமிழர்களின் தொன்மை நூலான சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கானல் வரிப்பாடல்கள் குரவைப்பாடல்களும் துன்பமாலை என்பவை கிராமிய இசைப்பாடல்களுக்கு தோற்றுவாயாக அமைந்திருந்தாலும் தாலாட்டு எனும் சொல் 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியாழ்வாரின் திருத்தாலாட்டு எனும் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

" மாணிக்கங்கட்டி வயிர மிடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணியுனர்க்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ வையமளந்தானே தாலேலோ"

என்று தொடங்கும் பாடல் சான்றாகின்றது. இப்பாசுரமானது கிருஸ்ணபக்தியை குழந்தைகட்கு ஊட்டும் முகமாக யசோதை பாடுவது போல பெரியாழ்வாரின் பாடப்பட்டுள்ள பாடலாகும்.

இதனைப் போல குலசேகர ஆழ்வார் திருக்கண்ணபுரத்து சௌரிராஜனை இராமனாகப் பாவித்து தாலாட்டுப் பாடியுள்ளார். அதில்

" மன்னுபுகழ்க் கௌசலைதன்
மாணி வயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன் முடிகள்
சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னி நன்மா மதின்புடைசூழ்
கணபுரத் தென்கருமணியே
என்னுடைய இன்னமுதே
இராகவனே தாலேலோ"

எனும் இப்பாடல் இன்னொரு எடுத்துக்காட்டாக அமைகின்றது இது தவிர மணிவாசகரின் திருச்சாழலும் தாலாட்டின் முன் மாதிரியாகவும் திகழ்கின்றது. இவ்வாறான பக்தி இலக்கியங்கள் அனேகமாக பக்தியையும் சமய உண்மைகளினையும் வேரூன்றப்பண்ணுவதற்கும் பரப்புவதற்குமாக பாடல்களாகத் தொகுக்கும் முறைமை முற்காலத்திருந்து உண்டு. அவ்வாறே மக்களின் அன்றாட வாழ்க்கை முறையுடன் இன்றியமையாததாயிருந்த தாலாட்டுப் பாடல் வகைகளையும் பக்தியியலாளர்கள் எடுத்தாண்டுள்ளனர். இதனால் "தாலாட்டு" எனும் பாடல்வகை தமிழர் பாரம்பரியத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது என்பது இதனால் அறியமுடிகின்றது.

**தாலாட்டுப் பாடல்களின் இசையமைப்பு**

இசையமைப்பானது தாலாட்டின் அமைப்பிற்கும் தோற்றத்திற்கும் இன்றியமையாததாகவும் அளவுகோலாகவும் அமைந்துள்ளது. இது முறைப்படி இருந்து பயிலப்படாவிடினும் செவிவழியாகக்கேட்டு அப்பயிற்சியால் கைக்கொள்ளப்படுகிறது. தாம் பரம்பரை பரம்பரையாகக் கேட்டறிந்த பாடல்களை சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல சொற்களையிட்டும் மெல் ஓசையில் பாடும் அமைப்பாக இத்தாலாட்டு விளங்குகிறது.

பாடகர் இப்பாடலைத் தொடங்குமுன் அதன் அமைப்பையொட்டிய அசைச் சொல்லிலான இசையமைப்பைப் பாடத் தொடங்குவர். பொதுவாக "ஆராரோ, ஆரிரரோ, ஓ ஓ ரர ரர, ஓராரோ, ஓராரோ, ரிரிரிரி….., ரிரிரிரி…. ரோ ரொ ரோ ரொ" போன்ற அசைச் சொற்கள் இசைக்கப் பெறுகின்றன.

இவற்றில் பொதுவாக முதலாம் வரி பொருளற்ற ஒலித்தொகுதி இடம்பெற இரண்டாம் வரி பொருளுடன் அமைவதனைக் காணலாம்.

"ஆராரோ ஆரிரரோ – என்
ஆராட்டும் நீ கேளாயோ" என்பதில் நோக்கலாம்.

பொதுவாக இப்பாடல்கள் நீலாம்பரி இராகத்திலும், சில ஆனந்தபைரவி, கமாஸ், சங்கராபரணம், ரீதிகௌளை, குறிஞ்சி முதலிய இராகங்களில் அமைந்திருப்பதனை அவதானிக்கலாம். ஆனால் இவ்விராகங்கள் தமது முழுச்சுயரூபத்தில் அமையாது நாடோடி வகையைச் சார்ந்து இலகுவாகவும், இனிமையாகவும் அமைந்திருக்கும்.

**தாலாட்டுப்பாடல்களின் அமைவு**

குழந்தையின்மையால் சமூகத்தினால் தாயானவள் அவப்பெயர் கிடைக்காவண்ணம் தனக்கு தாய்மையினையும், குலமரபுத் தொடர்ச்சியினையும், தனக்கு மகிழ்ச்சியினையும் அளித்தமையையிட்டு அதற்குக் காரணமான தனது குழந்தையை புகழ்ந்தும், மகிழ்ந்தும் பாடுவதில் விருப்பும், கருத்துமுடையவளாக தாய் இப்பாடல்களை சீரிய அமைப்பில் பாடுவதற்கும் தாய்மைக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள சமுதாயக்கண்ணோட்டத்தை இணைத்துக் காட்டுவதற்குரிய முறையில் தாலாட்டுப்பாடல்களின் பொருளமைப்பு காணப்படுகின்றது.

மேலும் குழந்தையைப் புகழ்தல், அழுங்குழந்தையை அமைதிப்படுத்துதல், தாயின் தவமும், அதன் பயனால் கிடைத்தமையையும், சுற்றத்தார் பெருமை, குழந்தையின் குடும்பச்சிறப்பு, வழிபாடு,

சடங்கு முறைகள் என்பன விபரமாகத் தாலாட்டுப்பாடல்களின் பொருளமைப்பாகவுள்ளது. உவமை, உருவக அணிகள் தாலாட்டுப்பாடல்களின் பொருளமைப்பைச் சிறப்பிக்கின்றன.

இத்தாலாட்டுப்பாடல்களின் யாப்பினை நோக்குமிடத்து இவை பெரும்பாலும் ஈரடிக்கண்ணிகளால் அமையப் பெற்றுள்ளன. சில பாடல்கள் நான்கடிகளாலும் அமைந்துள்ளன. இத்தாலாட்டுப்பாடல்கள் ஏனைய நாடோடிப்பாடல்களிலும் பார்க்க திருந்திய நடையுடையதாகவும், சொற்கள் தரமானவையாகவும், சிறப்பான மொழிநடையிலும், இலக்கியநயமுள்ளவையாகவும் உள்ளன.

மேலும் தாலாட்டுப்பாடல்களின் கண்ணிகளில் மோனைத்தொடர்புகள் பாடலை இழுத்துப்பாடும் இனிமையான ஓசையில் சிறப்பாய் அமைந்துள்ளன. ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் வழங்கும் தாலாட்டுப்பாடல்கள் பொருளமைப்பிலும் சொல்லமைப்பிலும் ஓசையமைப்பிலும் மிகுந்த ஒற்றுமையுடையனவாக அமைந்துள்ளன.

**தாலாட்டுப்பாடல்களின் பயன்பாடு**

தாலாட்டுப்பாடல்கள் தொன்றுதொட்டு இன்றுவரை குழந்தையை தூங்கச் செய்வதற்குப் பிரதானமாகப் பயன்படுத்துவதோடு சில விசேடமாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**I. குழந்தையை நித்திரையாக்குவதற்கு பயன்படுத்துதல்**

இத்தேவைப்பாடே தாலாட்டின் முக்கிய நோக்காகும். அழுகின்ற குழந்தையை தாய் தாலாட்டுப் பாடலைப்பாடி தொட்டிலை ஆட்டியோ அல்லது தன்னருகே வளர்த்தி குழந்தையின் முதுகை மெதுவாகத் தட்டிப்பாடியோ அன்றி ஏணையிலிட்டு ஆட்டும்போதோ குழந்தை அப்பாடலின் ஒலிநயத்தை உணரத் தொடங்கியும் தொட்டிலின் ஒழுங்கான அசைவை உணர்ந்து ஏற்படும் சுகத்தினால் குழந்தையின் மனம் உறக்கத்தில் ஈடுபடத் தொடங்குகின்றது.

குழந்தை தூங்குவதற்காகத் தாய் பாடும் பாடல்களில் தன் குழந்தையை தெய்வங்களாகவும் அல்லது தெய்வ அருள் கிட்டிய சொத்தாகவோ அன்றி அரும் பொருளாகவோ அல்லது காவியத் தலைவர்களாகவோ வருணித்து ஈரடிக் கண்ணிகளால் ஆக்கப்பெற்ற இப்பாடல்கள் எளிதில் ஞாபகம் வைப்பதற்கும் குழந்தை துயிலும் வரை இசைத்துப்பாடவும் ஏற்றவகையில் அமைந்துள்ளன. மேலும் “நித்திரைக்கோ நீ அழுதாய்?” என கேள்வி கேட்டுப்பாடுவதாக இப்பாடல் பொதுவாய் அமைந்திருக்கும்.

இவ் ஈரடிக் கண்ணிகட்கு தொடக்க இசையாக அல்லது பாடலாக “ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீயழுதாய்” எனும் வரிகள் பொதுவாய் வருவதனைக் காணலாம்.

எடுத்துக்காட்டு:

“கண்ணே உறங்குறங்கு என்கண்மணியே கண்ணுறங்கு
கண்ணுறங்கு கண்ணுறங்கு கண்மணியே கண்ணுறங்கு
முத்தே பவளமே – என்முழுமதியே கண்ணுறங்கு
கண்ணே உறங்குறங்கு – என்கண்மணியே உறங்குறங்கு”

**II. குழந்தைக்கு உணவூட்டும் தாலாட்டு**

பசித்து அழும் குழந்தையின் பசியை உணர்ந்ததாய் அதன் பசியாற்றுவதற்காகவும் தொடர்ந்து அழும் குழந்தையின் நினைவைத்திருப்பி உணவின் பால் ஈர்த்து அதன் பசியைப்போக்க அதாவது வாரி அணைத்து பாலுட்டுவதற்காகவோ அன்றி உணவு கொடுக்கசீராட்டி தாலாட்டுவதற்காகவோ இப்பாடல் பாடப்பெறும்.

எடுத்து காட்டு.

"பாலுக்கோ நீ அழுதாய்
பசித்தழுது வந்தாயோ
கூழுக்கோ நீ யழுதாய்
குழுந்த பசி ஆறலையோ"

இத்தகைய பாடலைப் பாடி அழும் குழந்தை தாலாட்டை கேட்டு அழுகையையும் மறந்து பிடிவாதத்தினையும் விடுத்து பாலை உண்டு அன்றி உணவையுண்டு குழந்தை பசியாறுகின்றது.

**III. குழந்தைக்கு அறிவூட்டுவதற்காகப் பாடும் தாலாட்டு**

தாயானவள் தனது பிள்ளையை நல் அறிவும் பண்பும் உள்ள பிள்ளையாய் வளர்ப்பதற்கே பெரிதும் விரும்புவாள். அவ்வகையில் குழந்தைக்கு சிறுவயதிலேயே அவ்விருப்பை நிறைவேற்ற தாலாட்டையும் கருவியாகப் பயன்படுத்துகின்றாள். தன்மகன் ஏட்டுக்கல்வியை கற்க வேண்டும் எனும் விருப்பில் ஓர் தாய் பாடும் பாடலில் "கண்டுப்பனைஓலை மகனே உனக்கு கணக்கெழுத நல்லோலை…" எனப்பாடுதல் இங்கு நோக்கத்தக்கது

"கண்டுப்பனை ஓலை – மகனே உனக்கு
கணக்கெழுத நல்லோலை
பனையோலை பெரியோலை – மகனே உனக்கு
பேரெழுத நல்லோலை"

**IV. தெய்வபக்திக்காய் பயன்படுத்துதல்**

தாலாட்டுப் பாடல்களில் சில, தாயானவள் தான் தவமிருந்து பெற்ற மகவை இறைவனாகப்பாவித்தும் தனக்கு இறைவனால் அருளப்பட்ட கொடையாகக் கருதி அதற்கு இறைவனிற்கு நன்றி செலுத்தும் முகமாகவும் பாடலைப் பாடுவதாகவும் அமைந்துள்ளன. இப்பாடல்களில் இறைவனின் சிறப்புகள், புராண வரலாறுகள், நம்பிக்கைகள் என்பன உட்பொருட்களாக அமைந்திருக்கும்.

"காணிக்கை நேர்ந்து, கைநிறையப் பொன்நேர்ந்து
மாணிக்கமெண்டு, மடிக்குழந்தை ஏந்திவந்தேன்
மடிக்குழந்தை ஏந்தி வந்தேன்
என் மனக்கவலை தீரவெண்டு…."

**V. தாயின் உணர்வை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தல்**

தாலாட்டுப்பாடல்களில் பல பாடல்கள் தாயின் இன்பதுன்பங்களை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் அமைந்துள்ளமையைக் காணலாம். அதில் இன்பம்சார் பொருளாக தனக்கு மகவு

கிடைத்தமை, தன் கணவனின் பெருமை, குலப்பெருமை, இறைவனின் கருணை, பிள்ளையின் குணம், அழகு முதலியன அமைந்திருக்கும். துன்பம் சார்ந்தவையாக தாய் தான் குழந்தையின்றித் தவித்த தவிப்புகள், கணவனின் அல்லது அவன் சார்ந்தவர்களின் குழந்தைக்கு ஏற்பட்ட நோய் முதலியன இடம்பெறும்.

இவை தவிர மகவின் எதிர்காலம், திருமண வாழ்க்கை, தொழில் முதலியன கற்பனையாகவும் பாடப்படும் பாடல்களும் தாலாட்டில் இடம் பெறுகின்றன இவற்றில் மிகப் பெரும்பான்மையானவை மகிழ்ச்சியை எடுத்தியம்புவையாக இடம்பெறுகின்றன.

" மலடிக் கொரு குழந்தை – மகனே நீ
மாயவனார் தந்த பிச்சை
இருளிக் கொரு குழந்தை – மகனே நீ
ஈசுவரனார் தந்த பிச்சை
காயாது காய்ந்தாயோ – மகனே நீ
காத்திகையாய் பூத்தாயோ"

### VI. உறவுகள் பலப்படல்

தாலாட்டுப்படல்களினைத் தாயானவள் பாடும்போது "பாட்டன் பரிசு தந்தானோ..", "பாட்டி அணைத் தாளோ" எனும் வரிகள் சில அமைந்துள்ளன. இவற்றின் மூலம் பாட்டன், பாட்டியின் அன்பு விவரிக்கப்படுவதனையும் மூத்த குழந்தை, கணவன், மாமி, மாமா, அண்ணன், அக்கா, சித்தி எனும் அனைத்து உறவுகளும் பாடல்களில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டும் இன்னும் உறவுகள் குழந்தைகளிற்கு அளித்த பரிசுப் பொருட்களும் குறிப்பிடப்பட்டுப் பாடப்படுவதானால் தாயானவள் சூசகமாகத் தனது நன்றியறிதலைத் தெரிவிக்கும் வகையால் பாடப்படுவதானால் உறவுகளையும் அவர்களின் அன்புத் தொடர்புகளையும் இணைத்துப் பாடப்படுவது உறவுகளினை தொடர்ந்து பேணுவதற்கும் தொடர்புகள் அறாவண்ணம் இருப்பதற்கும் பயன்படுகின்றன.

எடுத்துக்காட்டு.

"பொழுதால் அடி அளந்து புத்தகத்தில் நாள்பார்த்து
காதுகுத்தி தோடுபோட்டு நல்லதொரு பேருமிட்டு
மருங்கவைச்சு உன்மாமன் சீர்வரிசைகள் செய்வாராம்
தங்கத்தால் தோடு செய்து காதுக்குச் சிமிக்கியும் கொண்டு
காது குத்த வருவார்கள் கனத்தகுடி மாமன் மார்கள்
பாக்குப்பதி னெண்கலமாம் பச்சரிசி முக்கலமாம்
இளநீர் இருகலமாம் இளந்தேங்காய் முன்னூறாம்
கட்டோடு வெற்றிலையாம் கமுகம் களிப்பாக்காம்
இத்தனையும் கொண்டு இறக்குவார் தாய்மாமன்."

**முடிவுரை**

ஒரு இன மக்களின் பண்பாடு தொடர்பான விடயத்தில் நாட்டார் பாடல்கள் மிகுந்த செல்வாக்குப் பெறுகின்றன. அவற்றில் தாலாட்டுப் பாடல் என்பது ஈழத்தில் வாழும் தமிழரிடையே அத்தியாவசியமானதொன்றாகப் பாடப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது குழந்தையுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் தாலாட்டு என்பது தவிர்க்க முடியாததொன்றாகின்றது தாயானவள் தனக்கு தெரிந்த புராண இதிகாசக் கதைகள், ஏனைய விடயங்கள் என்பவைற்றை இசையுடன் சேர்த்துப்பாடும் பாடல்களாகவும் இனிமையான இசையுடைய பாடல்களாகவும் எளிமையானதாகவும் பாடல்களாகவும் அமைந்துள்ளன.

அனேகமாக இப்பாடல் பெண்களாலேயே பாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதிலும் பிரதானமாகத் தாயும் சில சந்தர்ப்பங்களில் பாட்டி, சித்தி, செவிலித்தாய், வேலைக்காரப் பெண், உறவுக்காரப் பெண் போன்றோரால் பாடப்படும் பாடலாக அமையப்பெற்றுள்ளது.

இவ் ஆய்வில் தாலாட்டு வரலாற்று இலக்கியகாலங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சான்று, இப்பாடல்களின் இசையமைப்பு, பாடல் அமைப்பு, பயன்பாடு எனும் உபதலைப்புகளினூடாக உதாரணப்பாடல்களுடன் ஆராயப்பட்டுள்ளன.

**உசாத்துணை நூற்பட்டியல்**

1. இராமலிங்கம்.மு - 1951 – “இலங்கை நாட்டுப்பாடல்கள்” - கொழும்பு சுதந்திரன் பிரிண்டர்ஸ்”
2. - – 1961 - “வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்” - சுன்னாகம் திருமகள் அழுத்தக வெளியீடு
3. - - 1970 – “நாட்டார் பாடல்களில் பாண்டித்தியம்” - யாழ்ப்பாணம் சக்தி அச்சக வெளியீடு
4. - - 1962 -“ஈழத்து நாடோடிப்பாடல்கள்” - யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் அச்சக வெளியீடு
5. பாலசுந்தரம்.இ - 2005(2ம் பதிப்பு) -“ஈழத்து நாட்டார்பாடல்கள்” - மணிமேகலைப்பிரசுரம்
6. பாலசுந்தரம்.இ - 1991 – “நாட்டார் இசை இயல்பும் பயன்பாடும்” - நாட்டார் வழக்கியல் கழக வெளியீடு
7. - -1987 - “நாட்டார் பாடல்கள்” - இலங்கை கல்வி வெளியீட்டுத்திணைக்கள வெளியீடு